

திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையை ஆவடி சட்டமன்ற தொகுதி திருவேற்காடு பகுதியில் வசித்து வரும் மகாதேவனுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காசோலை வழங்கினார் உடன் நகர கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி ஒன்றிய கழக செயலாளர் ப.ச. கமலேஷ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.டி. பிரியா குமார், வார்டு செயலாளர் தெய்வசிகாமணி, மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் மயிலை கிழக்கு பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட, மாநில, பொதுக்குழு, செயற்குழு, பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளை சார்ந்த நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மகளிர் அணிகள், இளைஞர் அணிகள் மற்றும் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

### கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம்

## பெரியபுலியூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா!

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பரிசுகள் வழங்கினார்!

கும்முடிப்பூண்டி, செப்.23-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், பெரியபுலியூரில் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அமரம்பேடு கிராமத்தில் தொடர் கிரிக்கெட் போட்டி பெரியபுலியூரில் கிராமத்தில் தொடர் கைபந்து போட்டி நடைபெற்று வந்தது.

கிரிக்கெட் போட்டியில் 40 அணிகளும், கைப்பந்து போட்டியில் 28 அணிகளும் பங்கேற்றன. கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன் முன்னிலையில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.முத்து ஏற்பாட்டில் அமரம்பேடு கிராமத்தில் தொடர் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு ரூபாய் 30 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூபாய் 20 ஆயிரம், முன்றாம்; பரிசு ரூபாய் 10 ஆயிரம் மற்றும் பெரியபுலியூரில் கிராமத்தில் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு ரூபாய் 10 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூபாய் 8 ஆயிரம், முன்றாம் பரிசு ரூபாய் 5ஆயிரம், 5ஆயிரம், நான்காவது பரிசு ரூபாய் 3 ஆயிரம் பரிசுகளையும் வெற்றி கோப்பைகளையும் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் எம்.முனிவேல், தீனதயாளன், சுஜானா சுதாகர், நாகராஜ், யுகேந்தர், யஷ்வந்த்குமார். சிவஇளங்கோ, எம்.முரளி, கோபால், பா.ஆனந்தராஜ், பிரவீன்குமார், அன்பு ரமேஷ், ஜார்ஜ்மெர்ஸி, அரி பாபு, சிவகுமார், பிரேம், லால், எழுமலை, ஈஸ்வரன், மஸ்தான, டில்லி, பி.வினோத், முருகையன், பிரேம்குமார், மூர்த்தி, அன்பழகன், நிதி, முனுசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### எஸ்.முரளி முன்னிலை! மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

## மயிலை கிழக்கு பகுதி 124 வது - 124 அ வட்டப் பகுதிகளில் களஆய்வு!

### ஏ.தாஸ் – மா.பா.அன்பு அறிக்கை!

சென்னை, செப் 23-

பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் இன்று (23.09.2025 - செவ்வாய்கிழமை) சத்தியவாணி முத்து நகரில் காலை 7 மணி அளவில் 124 வட்டம் மற்றும் காலை 9 மணி அளவில் 124.அ வட்டம் ஆகிய வட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., அதிகாரிகளுடன் நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொள்கிறார்.

வட்டக் கழகத்தை சார்ந்த மாமன்ற உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி வட்ட பாக நிர்வாகிகள், BLA2 மற்றும் BLC BDO

கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு 124 வது வட்டக் கழக செயலாளர் ஏ. தாஸ் மற்றும் 124 அ வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை விடுத்துள்ளனர்.

### ஜெ.நடராஜன் – துர்காதேவி நடராஜன் தலைமை!

## நங்கநல்லூரில் ஆதார் அட்டை சிறப்பு முகாம்!

### நடிகர் போஸ் வெங்கட் பார்வையிட்டார்!

சென்னை, செப்.23

சென்னை நங்கநல்லூர் 100 அடி சாலையில் உள்ள விளையாட்டு திடலில் 167 வது வட்ட திமுக சார்பில் ஆதார் அட்டைசிறப்பு முகாம் வட்ட செயலாளர் ஜெ.நடராஜன், 167வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த முகாமில் ஆதார் அட்டையில் பிழைகள், பெயர், முகவரி, செல்போன் எண் மாற்றம், குழந்தைகளுக்கான புதிய அட்டை போன்ற பணிகள் நடந்தது. இந்த முகாமை நடிகர் போஸ் வெங்கட் பார்வையிட்டு மக்கள் ஆதார் அட்டை திருத்தங்களுக்காக அலையும் நிலையில் சிறப்பு முகாம் நடத்தி தீர்வு காண செய்ததற்கு நன்றி தெரிவித்து பாராட்டினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட அயநல்லூர், குருவாட்டுச்சேரி ஏனாதிமேல்பாக்கம் ஆகிய கிராமங்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு பொதுமக்களின் வழங்கிய மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த குமார், நிர்வாகிகள் மு.பகலவன், வெ.அன்புவாணன், சுரேஷ்,சுகு, உதயகுமார் ,கருணாகரன்,தமிழரசன், ஏ.ஜோதி, லோகேஷ், தியாகு ,ச. மணிகண்டன், விஜயகுமார்,கல்வி செல்வன், பழனி பிள்ளை, பாப்பையா, அயுப்கான், மணிகண்டன், நைனியப்பன், குமார், மனோஜ், நந்தகுமார், கோபி, சாய்கிருஷ்னா, யோகேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, எளாவூர் ஊராட்சி, எளாவூர் குடியிருப்பில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புதிய பகுதி நேர நியாயவிலைக் கடையை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், எம்.கேசவன், வேதா, ஜெயராமன், எம்.ஜெயசந்திரன், ஆர்.எஸ்.காளத்தி, ரவி, ப.அறிவழகன், திருநாவுக்கரசு, இளவரசன், பாபு, அருள், கோவிந்தன், குமார், ரமேஷ், ஆறுமுகம், இளங்கோ, நாகவேல், தியாகு, ராஜேஷ், உமாபதி, நரேந்திரன், தில்லைகுமார், விஜயன், பாலு, ரமேஷ், ராமன், சிவலிங்கம், மன்சூர்அலிகான், மணிகண்டன், விஸ்வா, முருகன் வீரா உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### மாநகராட்சிப் பகுதிகளில்

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

சென்னை,செப்.23-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (23.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-8ல் திருவொற்றியூர், பெரியார் நகர் பிரதான சாலை, மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-19ல் எம்.எம்.டி.ஏ. மாத்தூரில் உள்ள ராயல் பேலஸ், தண்டையார் பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-42ல் இளையா தெருவில் உள்ள காசி நாடார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-52ல் பழைய வண்ணாரப்பேட்டை, எம்.சி. சாலையில் உள்ள செயிண்ட் ராக்ஸ் சமூகக் கூடம், திரு.வி.க. நகர் மண்டலம்

(மண்டலம்-6), வார்டு-67ல் திரு.வி.க. நகரில் உள்ள காமராஜர் திருமண மண்டபம், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-87ல் பாடி, கோபால் நகர், காமராஜ் சாலையில் உள்ள கே.எஸ்.பி. மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-99ல் புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-116ல் திருவல்லிக்கேணி, சிங்காரச்சாரி தெருவில் உள்ள ஸ்ரீ ராகவேந்திரா சபா மண்டபம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10) வார்டு-129ல் சாலிகிராமம், கே.கே. சாலையில் உள்ள சுதர்மா திருமண மண்டபம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-151ல் ஆற்காடு சாலையில் உள்ள கிருஷ்ணவேணி திருமண மண்டபம், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-158ல் நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையம் எதிரில் உள்ள ஐ.டி.எல்.பி. நிலம், அடையாறு மண்டலம் (மண்டலம்-13) வார்டு-174ல் பெசன்ட் நகர், சாஸ்திரி நகர் 5வது குறுக்குத் தெருவில் உள்ள சமுதாயக் கூடம் ஆகிய 12 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### மாநகராட்சி நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி

## சென்னை பள்ளிகளுக்கு 2,300 புவிக்கோளங்கள்!

### மேயர் திருமதி ஆர். பிரியா வழங்கினார்!

சென்னை,செப்.23-

சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி,

மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னை பள்ளி மாணவர்களின் புவியியல் கற்றல் திறனை மேம்படுத்திடும் வகையில் 2,300 புவிக்கோளங்கள் (Globe) வழங்கும் விதமாக, 20 சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு புவிக்கோளங்களை நேற்று (22.09.2025) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

மேயர் அவர்களின் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் புவியியல் பாடத்தினை எளிதாக கற்கும் வகையில், ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு புவிக்கோளம் வீதம் 2,300 வகுப்பறைகளுக்கு மொத்தம் ரூ.39.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மாணவர்களின் புவியியல் கற்றல் திறனை மேம்படுத்த மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள அனைத்து சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைக்கு ஒன்று வீதம் 2,300 புவிக்கோளங்கள் மேயர் அவர்களால் இன்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவநாதன், உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.



எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில், இம்பாக்ட் மற்றும் மாஸ்டெக் நிறுவனத்தின் மூலமாக வைக்கப்பட்ட 200 மரக்கன்னுகள், கழக அயலக மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார், மேலும் இந்நிகழ்வில் 99 வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், இம்பேக்ட் நிறுவனத்தின் சார்பாக மனோஜ் மற்றும், பி .ரவிச்சந்திரன் உதவி ஆணையர் IRS G.S.T ஆகியோர் கலந்து கொண்டனர்.


